**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 13.07.2016**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்ப,மற்றும் அறிவுரைகள் (13.07.2016 முதல் 17.07.2016)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 °செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 72 முதல் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 58 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 21 கி.மீ அளவுக்கு வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ பெறப்படும் மழையை பயன்படுத்தி 60 நாட்கள் வயதுடைய மஞ்சளுக்கு 25 கிலோ தழைச்சத்து மற்றும் 18 கிலோ சாம்பல் சத்து மேலுரமாக இடவும்.
- ✓ கோயமுத்தூர் மாவட்டத்தில் வரும் நாட்களில் அதிக காற்றின் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால் திராட்சையில் அடிசாம்பல் அல்லது மேல்சாம்பல் நோய் தாக்க வாய்ப்புள்ளது. இதனை கண்கானித்து மேல்சாம்பல் நோய்க்கு 0.3சதம் நனைந்த கந்தகம் தெளிக்கவும். மேலும் அடிசாம்பல் நோய்க்கு 1 சதம் போர்டோ கலவையை தெளிக்கவும்.
- ✓ கார் பருவ நெல் நடவு தூர் பிடிக்கும் தருணத்தில் இருப்பதால் ஒரு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்து இடவும். அதன் பிறகு தண்ணீரை வடிக்க வேண்டாம். இதனை ஜீலை 16 தேதிக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- ✓ தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்காணித்து ப்பென்தையான் (Fenthion) 100 EC 500 மில்லி ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.
- ✓ ஓணம் பண்டிகைக்காக சாகுபடி செய்யப்பட்ட வாழை மரங்கள் அதிக காற்று மற்றும் மழையினால் பாதிக்கப்படாமல் இருக்க முட்டு கொடுக்கவும்.

## 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 15.07.2016 முதல் 17.07.2016 வரை இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 34°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 முதல் 25 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ நிலவும் வானிரையால் நடவு செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு புரோபனோபாஸ் (**Profenophos**) 50 இ.சி. 400 மி.லி அல்லது 50 சதம் நனையும் கந்தகத்தூள் (**Wettable sulphur**) 400 கிராம் அல்லது டைக்கோபால் (**Dicopal)** 600 மி.லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் குறுவை நெற் பயிரில் களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டர் (அ) பென்சல்பூரான் மீதைல் + பிரிட்டிலாகுளோர் 4 கிலோ / ஏக்கர் இவைகளில் ஏதாவது ஒன்றை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். களைக்கொல்லி இடும் போது வயலில் 2 செ.மீ அளவிற்கு நீர் இருக்க வேண்டும். களைக்கொல்லி இட்டபின் 2 நாட்களுக்கு வயலுக்கு நீர் பாய்ச்சவோ வடிக்கவோ கூடாது.
- ✓ மறுதாம்பு கரும்பு பயிரில் 60 ஆம் நாள் ஒரு களை எடுத்து விட்டு ஒரு ஏக்கருக்கு 80 கிலோ யூரியாவும் 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து இடவேண்டும்.
- ✓ ஜீலை 13 மற்றும் 14-ம் தேதிகளில் நெல் தரிசில் அறுவடை செய்றப்பட்ட இறவை உளுந்தை வெயிலில் காய வைக்கவும்.
- ✓ நெல் தரிசில் சாகுபடி செய்யப்பட்ட இறவை பருத்தி பயிருக்கு மழையினால் ஏற்படும் சேதத்தை தவிர்க்க நன்கு வடிகால் செய்து கொடுக்கவும்.

## 3. தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 85 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் காற்றின் வேகம் 3 கி.மீ அளவிலும் மற்ற மாவட்டங்களில் 20 முதல் 28 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ❖ வரும் தினங்களில் அதிக வேகத்துடன் கூடிய காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு முட்டு அணைக்கவும். கரும்பு நட்ட 7வது மாதம் பசும்கரும்பு தோகைகளை கொண்டு இரண்டு வரிசைகளை சாயாதவாறு பின்னவேண்டும்.

- ❖ தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்காணித்து ப்பென்தையான் (Fenthion) 100 EC 500 மில்லி ஒரு எக்டருக்கு தெளிக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களிலும் தேனி மாவட்டத்தில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் 15.7.16 முதல் 17.7.16 வரை இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 23°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 36°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 18°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் தேனி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் 3 முதல் 7 கி.மீ வேகத்திலும், மற்ற மாவட்டங்களில் 25 முதல் 28 கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால் மழை நீரை வீணாக்காமல் பயன்படுத்த தென்னை மரங்களை சுற்றி 5 அடி தூரத்தில் மண் கரை போட வேண்டும்.
- ✓ விவசாயிகள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தண்ணீர் தேங்காமல் உலர வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய், ஈ மற்றும் கொசுக்களின் பெருக்கத்தை தடுக்கலாம்.
- ✓ வரும் தினங்களில் அதிக வேகத்துடன் கூடிய காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு முட்டு அணைக்கவும். கரும்பு நட்ட 7வது மாதம் பசும்கரும்பு தோகைகளை கொண்டு இரண்டு வரிசைகளை சாயாதவாறு பின்னவேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலோசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 16°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 25 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தொடர் மழையின் காரணமாக, கோஸ் மற்றும் காலிபிலவரில் தலை அழுகலை தடுக்க காப்பர் ஆக்ஸி குலோரைடு மருந்தை 2 கிராம் என்ற அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ ஜுன் -ஜுலை பருவ மழை காலத்தில் நோய் பாதிப்பை தவிர்க்க உருளை கிழங்கு சாகுபடிக்கு திறன் மிக்க குப்ரி கிரிதாரி ரகத்தை நடவு செய்வீர். மேலும் தண்ணீர் நிலத்தில் தேங்காதவாறு வடிகால் செய்யவும்.
- ✓ ஜீலை மாதம் தேயிலை நாற்றுக்களை நட உரிய தருனமாகும். தோட்டக்கலைத் துறையில் தயாரக உள்ள தேயிலை நாற்றுக்களை மானிய விலையில் பெற்று பயனடைவீர்.

  பழமர சாகுபடியில் சூறைகாற்று வீசுவதால் மரங்கள் சாயாதவாறு முட்டு கொடுக்கவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 26°செ பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 54 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 9 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ ஒரு மாத வயதுடைய நிலக்கடலை பயிருக்கு *நிலக்கடலை ரிச்* என்ற பயிர் ஊக்கியினை ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் ஒட்டும் திரவம் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் தெளிப்பு செய்ய வேண்டும். இதனால், அதிக காய்கள் பிடிப்பதுடன் தரமான கடலைப்பருப்பு கிடைக்கும். மேலும் போதிய மண் ஈரம் இருக்குமாறு பார்த்து கொள்ளவும்.
- ✓ வரும் நாட்களில் மாவட்டத்தில் மேகமூட்டத்துடன் பரவலான மழைக்கு வாய்ப்புள்ளது. இதனால், பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் சற்றே குறைந்து முட்டை உற்பத்திக்கு உகந்த வானிலையாக நிலவும். காற்றின் ஈரப்பதம் அதிகரிக்கும் என்பதால, பூஞ்சான நச்சுக்களின் தாக்கம் தானியங்களில் காணப்படும் வாய்ப்புள்ளது. எனவே, தீவனத்திற்கு வாங்கும் தானியங்களின் ஈரப்பதம் 12% க்கு மேல் இருக்கக் கூடாது. மேலும், சேமிக்கும் தானியங்களில் ஈரப்பதம் 10 முதல் 11% க்கு மிகாமல் இருப்பது நல்லது.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 14.7.16 முதல் 17.7.16 வரை இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 60 மற்றும் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 8 முதல் 18 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுவதால், இறவையில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு போதிய வடிகால் வசதி செய்யவும்.

- ✓ வரும் தினங்களில் அதிக வேகத்துடன் கூடிய காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு முட்டு அணைக்கவும். கரும்பு நட்ட 7வது மாதம் பசும்கரும்பு தோகைகளை கொண்டு இரண்டு வரிசைகளை சாயாதவாறு பின்னவேண்டும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 31°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 23 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் இலவங்கப்பட்டை செடி, மரங்களில் மழை நீர் சேகரிக்க ஏதுவாக பாத்திகள் அமைக்கலாம்.
- புதிதாக தயாரிக்கப்பட்ட நிலங்களில் இரப்பர் நடவு செய்யலாம்.
- காற்றின் வேகம் அதிகமாக இருப்பதினால், வாழை மரங்களை மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்கவும்.
- இந்த பட்டத்தில் நடக்கூடிய நெல் நாற்றுகளை உடன் நடவு செய்யவும். நடவு பிந்தினால் அதிக அளவில் பூச்சி மற்றும் நோய் தாக்க வாய்ப்புள்ளது.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**